1981 ஏப்ரல் 6]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், தலைவரவர்களே, இப்போது ஏற்பட்ட அனுபவத்தை வைத்துதான் சொன்னேன். அவர்களுக்கு உதவிசெய்து, நிலத்தைக் கொடுத்துவிட்டால் மட்டும் அவர்களுடைய வாழ்க்கைக்குப் போதாது. ஆகையால் வேலைகள் கொடுத்து, அவர்களிடம் வேலை வாங்கி, அந்த இடத்தைவிட்டு அவர்கள் நகராமல் இருக்க அரசு ஆராய்ந்து வருகிறது. எங்கெங்கே அவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறது என்பதைக் கண்டறிந்து அந்தப் பகுதிகளில் இந்த ஏற்பாடுகளைச் செய்யலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். விரைவில் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

ஒகேனக்கல் மின்திட்டம்

*வினா எண் 650—திரு. மு. ப. முனுசாமி: திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் மின்சாரத் திட்டம் பல ஆண்டுகளாக எடுத்துக் கொள்ளப்படாமல் இருப்பதற்கான காரணம் யாது?

(ஆ) இது துரிதமாக நிறைவேற்ற நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் மாநிலங்கள் சம்பந்தப்பட்டதாக இருப்பதாலும் காவிரி நீர் பங்கீட்டுடன் தொடர்பு கொண்டதாக இருப்பதாலும் தாமதமேற்படுகிறது. இத்திட்டத்தை மத்திய அரசின் கீழ் அமைப்பது குறித்து கர்நாடக மாநிலத்துடனும், மத்திய அரசுடனும் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன.

திரு. மு. ப. முனுசாமி: தலைவரவர்களே, சுமார் 15 ஆண்டுகளாக இந்தத் திட்டம் நிலுவையில் இருக்கிறது. இப்போதுகூட 58 கோடி ரூபாய் அளவில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. இப்படி ஆண்டாண்டு காலமாக நிலுவையில் இருந்தால் 58 கோடி என்பது 580 கோடி ஆகிவிடும். சர்க்கார் நலனையும், அந்தப் பகுதி பொதுமக்கள் நலனையும் கருதி இதை ஒரு அத்தியாவசியமான முக்கியமானத் திட்டமாக எடுத்து நடத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 6-20)

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, 15 ஆண்டுகளாக அல்ல. 20 ஆண்டுகளாக இந்தத் திட்டம் கால தாமதமாக இருக்கின்றது. இந்தத் திட்டத்தை நிறைவேற்ற கர்நாடக அரசும் முன்வரவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவர வர்களே, அமைச்சரவர்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக ஆகி விட்டது என்று சொன்னார்கள், காலம் கடந்து கொண்டே போகிறது ஆனால் இரண்டு அரசுகளுக்கும் மோதல் வராமல் இருக்கவேண்டும் என்பதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை. ஆனால் கர்நாடக அரசு அவர்களுடைய எல்லைகளிலே அவ்வப் போது அணைகளைக் கட்டிக்கொள்கிறார்கள். ஆகவே ஒகனேக்கல் திட்டத்தைப் பொறுத்தவரையில் அது நம்முடைய எல்லைக்குள்ளே இருப்பதால் நாமாகவே ஏன் அணையினைக் கட்டிக்கொள்ளக் கூடாது. மேலும் தண்ணீர் நமது எல்லைக்கு வந்த பிறகுதானே வந்த தண்ணீரைத் தேக்குகின்ற வகையில் கட்ட வேண்டி இருக்கின்றது. எனவே நாமாகவே முன் முயற்சி எடுத்து இதைக் கட்டுகின்ற வகையில் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் கர்நாடக அரசை நாம் வற்புறுத்திக் கொண்டுதான் வருகிறோம். கர்நாடக முதல் அமைச்சர் அவர்கள் மார்ச் 80-ல் இந்தத் திட்டத்தை மத்திய அரசு நிறைவேற்றலாம் என்பதை கொள்கை அளவில் ஒப்புக் கொண்டார்கள். அதற்குப் பிறகு நம்முடைய முதலமைச்சரும் இதுகுறித்து கடிதம் எழுதினார்கள். அதற்கு கர்நாடக முதல் அமைச்சர் அவர்களும் இப்பொருள் குறித்து விரைவில் எழுதுவ தாக கூறினார்கள். ஆனால் ஒன்றும் வரவில்லை. ஆனால் இரண்டு தினங்களுக்கு முன்னாலே பத்திரிக்கையிலே பேட்டி பற்றிய ஒரு செய்தி வந்தது. அது உண்மையா என்பது தெரிய வில்லை. அதிலே மத்திய அரசு இத்திட்டத்தை நிறைவேற்று வதை கர்நாடக முதலமைச்சர் ஏற்றுக்கொள்ளவில்லை என்று தெரிவித்ததாக கருத்து வந்திருக்கின்றது. ஆகவே மார்ச் 80-ல் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட இத்திட்டம் மார்ச் 81-ல் கொள்கை அளவில் விடப்பட்டுவிட்டதோ என்று நாம் ஐயுறவேண்டிய நிலை இருக்கின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்று சொன்னார்கள், எப்படி கர்நாடக அரசு தனது எல்லைக்குள்ளே பல அணைத் திட்டங்களை நிறை வேற்றிக்கொள்கிறார்களோ அதேபோல் நாமும் ஏன் நிறை வேற்றக்கூடாது என்று சொன்னார்கள். நாம் அரை மணி நேரம் கூட தாங்க முடியாத அரசு என்பதை மறந்துவிடக் கூடாது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் தலைவரவர்களே, நாம் அரை மணி நேரம் கூடத் தாங்க முடியாத அரசு என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நாம் அவ்வளவு பலவீனம் உடையவர்கள் அல்ல. மக்களின் ஆதரவு இருக்கும் வரை அரை மணிநேரம் அல்ல, 50 ஆண்டுகள் வரை கூட நாம் ஆட்சிக்கு வர முடியும். ஆகவே உதுபற்றி நினைக்கவேண்டாம். இப்போது கர்நாடக அரசு மாறி மாறி கருத்து தெரிவிக்கின்ற நிலைமையில் நாமே மத்திய அரசை மீண்டும் வற்புறுத்தி ஏற்பாடு செய்யவேண்டும். 80 மார்ச்சில் கர்நாடக அரசு ஒப்புக்கொண்டது. இப்போது மாறுகின்ற நிலை இருக்கிறது என்றால் நாமே அந்த அணையைக் கட்டிக் கொள்வதற்குரிய வகையில் மத்திய அரசோடு வாதாடி போராடி அனுமதி பெறுவதற்குரிய வகையில் அரசு என்ன முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கேட்கவேண்டியவர்கள் கேட்டுக்கொண்டே இருக்கிறோம். கொடுக்க வேண்டியவர்கள் இன்னும் கொடுக்கவில்லை.

சூரிய ஒளியிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டம்.

*வினா எண். 651— திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் பரிசோதனை தமிழகத்தில் நடைபெற்றதா?

(ஆ) ஆம் எனில் பரிசோதனையின் முடிவு என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:

(அ) ஆம்.

(ஆ) பெல் நிறுவனம் சூரிய வெப்பத்தில் இயங்கும் ஜெனரேட்டர் அமைப்பினை உற்பத்தி செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இத் திட்டம் ஆராய்ச்சி நிலையில் உள்ளது.

திரு. சேலம் மு. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரத்தைத் தயாரித்து பயன்படுத்துவதற்கான சாதனங்களையும், கருவிகளையும் மின் வாரியமே, குறைந்த விலையில் மக்களுக்கு வழங்க முன்வருமா? அதேபோல் அண்மையில் கட்டப்பட இருக்கின்ற மின் வாரியத்தின் பல மாடிக் கட்டிடத்தின் முழு மின்சாரத் தேவையையும் சூரிய ஒளியின் மூலமே பெறுவதற்குரிய வகையில் பரிசோதனையாக முயற்சி மேற்கொள்ளப்படுமா?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS